பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

14 10 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மங்கோலிய அதிபர் திரு. Khurelsukh Ukhnaa உடன் இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

2. ஏற்ற இறக்கமான விமான கட்டணங்களில் இருந்து விமான பயணிகளுக்கு நிவாரணம் அளிக்கும் புதிய முன்முயற்சியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

3. காஸாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்னிலையில் கையெழுத்தாகி உள்ளது.

4. ஹமாஸ் பிடியில் இருந்த இஸ்ரேல் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது.

5. 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா, சீனாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மங்கோலிய அதிபர் திரு. Khurelsukh Ukhnaa உடன் இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

இரு தலைவர்களும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளின் முழு அம்சங்களையும் ஆய்வு செய்ய உள்ளனர்.

பரஸ்பரம் மண்டல மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் இருவரும் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

இந்தப் பேச்சுகளுக்குப் பிறகு இந்தியா-மங்கோலியா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புதுதில்லி வந்துள்ள மங்கோலிய அதிபருக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருந்தளித்து கௌரவிக்க உள்ளார்.

மங்கோலிய அதிபருடன் அந்நாட்டின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தக நிறுவன தலைவர்களை உள்ளடக்கிய உயர்நிலைக் குழுவும் இந்தியா வந்துள்ளது.

<<<<>>>>

ஏற்ற இறக்கமான விமான கட்டணங்களில் இருந்து வி பயணிகளுக்கு நிவாரணம் அளிக்கும் புதிய முன் முயற்சியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இது பயணிகளுக்கு பெரிதும் பயன்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார்.

விமானப் பயணத்தை எளிதாக்கவும், பயணிகள் சிரமமில்லாமல் பயணம் செய்வதை கருத்தில் கொண்டும் சோதனை ரீதியில் இந்த முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

Alliance Airlines நிறுவனத்தில் முதலாவதாக தொடங்கப்படும் இந்த முன்முயற்சி பின்னர் மற்ற விமான நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அவர் கூறினார்.

அனைத்து மக்களுக்கும் நியாயமான மற்றும் நிலையான விமானக் கட்டணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்தார்.

**<<<<>>>>**

செயற்கை நுண்ணறிவு தொடர்பான நவீன தொழில்நுட்பத்தை கண்டுபிடிப்பது குறித்த போட்டியை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

பெண்கள் தலைமையிலான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தீர்வுகள், சர்வதேச அளவில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சவால்கள், இளையோருக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்ற 3 அம்சங்களில் இந்தப் போட்டி நடத்தப்படும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்கான பரிசுத்தொகை 5 கோடியே 85 லட்சம் ரூபாய் என்றும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சமூக பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும், சர்வதேச அளவில் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை இந்த தொழில்நுட்பம் உருவாக்கி வருவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

டிராக்டர் மற்றும் விவசாய கருவிகள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டிருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த விலை குறைப்பால் டிராக்டர் மற்றும் வேளாண் உற்பத்தி சாதனங்கள் விற்பனை அதிகரித்துள்ளதாக தருமபுரியைச் சேர்ந்த டிராக்டர் விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜி.எஸ்.டி. வரிகுறைப்பால் தோட்டக்கலை பயிர்களுக்கான உற்பத்தி சாதனங்கள் விலை குறைந்துள்ளது மகிழ்ச்சியளிப்பதாக தருமபுரியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

பிஹாரில் சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் விறுவிறுப்படைந்துள்ள நிலையில் ராஷ்ட்ரிய ஜனதாதள தலைமையிலான எதிர்க்கட்சிகள் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு சிக்கல் நீடிக்கிறது.

ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ் தில்லியில் உள்ளபோதும் காங்கிரஸ் கட்சிக்கு தொகுதிகளை ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பாக அக்கட்சியின் தலைமையுடன் பேசவில்லை.

இந்நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பட்னாவில் மாநில காங்கிரஸ் நிர்வாகிகளுடன் வேட்பாளர் தேர்வு குறித்து நேற்று ஆலோசனை நடத்தினர்.

காங்கிரஸ் வேட்பாளர்களை தேர்வு செய்ய அக்கட்சியின் மத்திய தேர்தல் குழு இன்று தில்லியில் கூடவுள்ளது.

<<<<>>>>

காஸாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்னிலையில் கையெழுத்தாகி உள்ளது.

எகிப்தின் சுற்றுலாத் தலமான ஷரம் எல் ஷேக்கில் எகிப்து, கத்தார், துருக்கி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஹமாஸ்-இஸ்ரேல் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஏற்கனவே அமெரிக்கா, கத்தார், துருக்கி, எகிப்து ஆகிய நாடுகள் உத்தரவாதம் அளித்துள்ளன.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் முன்முயற்சியில் இந்த அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இது உலகிற்கும், மத்திய கிழக்கிற்கும் ஒரு மகத்தான நாள் என்று அதிபர் திரு. ட்ரம்ப் தெரிவித்தார்.

தாம் எடுத்த முயற்சிகளுக்கு ஆதரவு அளித்த பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

போர் முடிந்துவிட்டதால் காஸாவில் மனிதாபிமான பணிகளில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. ட்ரம்ப் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஹமாஸ் பிடியில் இருந்த இஸ்ரேல் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதை பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இது மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்த உதவும் என்று சமூக வலைதளப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தாம் ஆதரவு அளிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டிருப்பது திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் உறுதியான முயற்சிகள் மற்றும் இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவின் வலிமையான உறுதிப்பாட்டிற்கு கிடைத்துள்ள மரியாதை என்றும் திரு. மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளிடையே உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியாவின் சிறு வர்த்தக மற்றும் சர்வதேச மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. Anne Aly இந்த வாரம் இந்தியாவிற்கு வருகைதர உள்ளார்.

புதுதில்லியில் அவர் வர்த்தகத்துறை அமைச்சர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களையும், பல மதத்தலைவர்களையும் சந்தித்து இரு நாடுகளுக்கிடையே வளர்ந்து வரும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளை விளக்குவார் என்று அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா, சீனாவை வென்றது.

கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடைபெற்ற இப்போட்டியில் 2-1 என்ற என்ற கோல் கணக்கில் இந்திய வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் இந்தியா - உஸ்பெகிஸ்தானை எதிர்கொள்ள உள்ளது.

--------------

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென், ஆயுஷ் ஷெட்டி ஆகியோரும், ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை மற்றும் சாய் பிரதிக் - ப்ருத்வி கிருஷ்ணமூர்த்தி இணையும் கலந்துகொள்கிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சார்பில் Anmol Kharb பங்கேற்கிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் தனீஷா கிரெஸ்டோ - துருவ் கபிலா இணை பங்கேற்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவில் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்வி இணை பங்கேற்கிறது.

ஆசியக் கோப்பை தகுதிச் சுற்று கால்பந்துப் போட்டியில் இந்தியா இன்று சிங்கப்பூரை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-----------

ப்ரோ கபடி லீக் போட்டியில் ஹரியான அணி 39-32 என்ற புள்ளிக் கணக்கில் பட்னா அணியையும், மற்றொரு போட்டியில் உத்திரபிரதேச அணி 40-24 என்ற புள்ளிக் கணக்கில் மும்பை அணியையும் வென்றன.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பட்னா அணி - குஜராத் அணியையும், இரவு 9 மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் தமிழக அணி - உத்தரப்பிரதேச அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>